வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 21.08.2025 வியாழக்கிழமை | இதழ் : 233 | பக்கங்கள் : 12

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

# மூளையாக செயல்பட்டவரை எதிர்க்க இலங்கை சக்தியற்றது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஓகஸ்ட் 21

**"2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு மூளையாக செயல் பட்டவரை அரசாங்கங்கள், இராணுவம், புலனாய்வு அமைப்புகள் நன்கு தெரிந்திருந்தாலும் அவரை எதிர்ப்பதற்கான சக்தி இலங் கையிடம் இல்லை" - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.**


நேற்றைய தினம் கொழும்பில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு மூளையாகச் செயல்பட்டவரை அடையாளம் காண அதிகாரிகள் இன்னும் போராடுகின்றனர். ஆனால், உண்மையை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த முடியாது.

"இவை எப்படி நடந்தன என்று நான் சி. ஐ. டியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ஆனால், எதையும் வெளிப்படுத்த முடியாது. மூளையாக செயல்பட்டவர் என்று அழைக்கப்படுபவரை ஏற்கனவே ஒவ்வோர் அரசாங்கத்துக்கும் - இராணுவத்துக்கும் - உளவுத்துறைக்கும் தெரியும். மூளையாகச் செயல்பட்டவர் எங்கே இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரிந்தாலும் அவரை நாம் எதிர்கொள்ள முடியாது.

"எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவும் - எனது அரசாங்கத்தை கவிழ்க்கவும் - எனது கட்சியை பலவீனப்படுத்தவுமே இந்தக் குற்றம் புரியப்பட்டது" - என்றார். (ஐ)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழாவில் நேற்றிரவு முருகப்பெருமான் சப்பை ரதமேறி பக்தர்களுக்கு அருள்பாலித்த திருக் காட்சி... (படம் : ஐ.சிவசாந்தன்)

# மாகாண சபைகளால் பல கோடி ரூபாய் வீண்!

### மைத்திரிபால கூறுகிறார்

கொழும்பு, ஓக. 21

"மாகாண சபைகளால் ஒவ்வோர் ஆண்டும் பல கோடி ரூபாய் வீணடிக்கப்படுகிறது", என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்தியா - இலங்கை இடையிலான புதிய உடன்படிக்கை எதிர்காலத்தில் பெரிய பிரச்னையாக இருக்கப் போகிறது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கையால் ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் பிறரை இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அழுத்தம் கொடுக்கப்பட்டது. மாகாண சபைகள்

11

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் நேற்று கைது!

கொழும்பு, ஓக. 21

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்றைய தினம் குற்றப் புலனாய்வு பிரிவினரால் (சி. ஐ. டி) கைது செய்யப்பட்டார்.

2022 மே 09ஆம் நாள் காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள்மீது நடத்தப்பட்ட வன்முறை தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமைதி ஆர்ப்பாட்டக்காரர்கள்மீதான தாக்குதல் தொடர்பான வழக்கில் தென்னக்கோன்

11

# ஆலயங்களில் நகை திருட்டில் ஈடுபட்ட பெண்கள் குழு கைது

### இருவர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் நகை திருட்டில் ஈடுபட்டுவந்த 8 பெண்கள் கொண்ட குழுவை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதான பெண்களில் இருவர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

கைதான குழு நல்லூர் கந்தசுவாமி ஆலயம், மடு மாதா தேவாலய திருவிழாக்களை இலக்கு வைத்தே வடக்குக்கு வந்துள்ளனர் என்று மூத்த

11

# பலாலி விமான நிலையம் விரைவில் விரிவாக்கப்படும்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி

கொழும்பு, ஓக. 21

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையம் ஏ-320 விமானங்கள் தரையிறங் கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சிறீதரன் எம். பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கப்படும் என்று நம்புகிறேன். ஏ-320 விமானங்கள் தரையிறங்கக்கூடிய விதத்தில் ஓடுபாதை விரிவாக்கம் செய்யப்படும். அத்துடன், விமானங்கள் நிறுத்துமிடம், பயணிகள் முனையங்களும் மேம்படுத்தப்படும். தற்போதுள்ள நிலம் திட்டமிடப்பட்ட விரிவாக்கத்துக்கு போதுமானதாகக் கருதப்படுகிறது. தேவைப்பட்டால் கூடுதல் நிலம் கையகப்படுத்தல் பரிசீலிக்கப்படலாம்.

எனினும், மத்தள சர்வதேச விமான நிலையம் போன்று

11

# நல்லூரானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், ஓக. 21

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில், இன்றைய தினம் தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. காலை 6.00

11

# இலங்கையில் எப்போதும் நீதிக்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

புதுடில்லி, ஓக. 21

"இலங்கையில் நீதிக்கான வாய்ப்புகள் எப்போதும் குறைவாகவே உள்ளன" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், "ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சீர்திருத்த வாக்குறுதிகளுடன் பதவியேற்று ஒரு வருடமாகியுள்ள நிலையில், படையினர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை துன்புறுத்துகிறார்கள். கொடூரமான பயங்கரவாத எதிப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள்", என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய துணை பணிப்பாளர் மீனாட்சி கங்குலி நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "இலங்கையில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து பகுப்பாய்வு

11

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, ஓக. 21

நல்லூர் தேர்த் திருவிழாவான இன்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்க வசதியாக விடுமுறை வழங்கப்படவேண்டுமென்று எம். பிக்களான

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழில் இடம்பெற்ற கர்நாடக இசைக் கச்சேரி!





யாழ்ப்பாணம், ஒக. 21

இந்திய தூதரகம், யாழ்ப்பாணம், ஆண்டுதோறும் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவின் ஒரு பகுதியாக கடந்த 19 ஆம் திகதி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவனால் நடத்தப்பட்ட பக்தி சார்ந்த கர்நாடக இசைக் கச்சேரியை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சி, இந்திய அரசின் 12 மில்லியன் அமெரிக்க டாலர் உதவித் தொகையால் கட்டப்பட்ட யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. டாக்டர் நித்தியஸ்ரீ, முருகன் பெருமானுக்கு அர்ப்பணிக்கப் பட்ட பக்திப் பாடல்களை ஆன்மாவை உலுக்கும் வகை யில் பாடி, பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தார். அவருடன் இந்தியாவிலிருந்து வந்த திறமையான கலைஞர்களின் இசைக் குழுவும் இணைந்து கச்சேரியில் பங்கேற்றது. இந்த கச்சேரி நிறைந்த பார்வையாளர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

நல்லூர் கந்த சுவாமி ஆலயத் திருவிழா காலத்தில் நிலவிய ஆன்மீகச் சூழலுடன் ஒத்திசைந்த இந்நிகழ்ச்சி, அனைவரின் உள்ளங்களிலும் ஆழமான பக்தி உணர்வை எழுப்பியது.

இந்த நிகழ்ச்சி இந்திய சாஸ்திரிய இசை மற்றும் பண்பாட்டு மரபின் கொண்டாட்டமாகவும், இந்தியா மற்றும் இலங்கையின் வட மாகாணத் திற்கிடையிலான ஆன்மீக மற்றும் பண்பாட்டு பிணைப்புகளை மேலும் வலுப்படுத்துவதாகவும் அமைந்தது.

(அ)

## மண்டைதீவு படுகொலை: சாட்சிகள் உண்டு

யாழ்ப்பாணம், ஒக. 21

மண்டைதீவில் புதைகுழிகள் உள்ளன என்பதற்கு வாழும் சாட்சியங்கள் உள்ளன. எனவே அவை தோண்டப்பட வேண்டும் என்று வேலணை பிரதேச சபை உறுப்பினர் பிரகலாதன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் நேற்று நடந்தது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1990களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களை சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சடலங்கள் மண்டைதீவில் சில கிணறுகளில் இருக்கின்றன என்பதற்கான வாழும் சாட்சியங்கள் உள்ளன. இந்த புதைகுழிகளை அகழ்ந்து உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும் - என்றார்.

(ஐ-05)

## காயங்களுடன் சடலம் மீட்பு!

வவுனியா, ஒக. 21

நெடுங்கேணியில் முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கனகராயன்குளம் - பெரிய குளத்தைச் சேர்ந்த ச. ரவிக்குமார் (வயது 45) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இவர், அந்தப் பகுதியில் ஆலை ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு பணி முடிந்து வெளியில் சென்ற பின்னரே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள பாலத்தின் கரையில் அவரின் சடலம் காயங்களுடன் மீட்கப்பட்டது. சடலத்துக்கு அருகாக வாகனம் ஒன்றின் உதிரிப்பாகங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டன. வாகனம் ஒன்று அவரை மோதிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

(ஐ-10)


## INVITATION FOR BID 2025/12
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987

4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Schedule(Section 5) for SBD 3 Documents

5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-08-21 To 2025-09-03** during **09:00 hrs and 15:00 hrs**.

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**

9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | **From 2025-08-21 To 2025-09-03** |
| | **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 2025-08-28** |
| | **Closing and Opening of Bids** | **At 2.00 P.M on 2025-09-04** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025/LAR/04 | Reconstruction of Pootharmadam Veethy at Neervely | 8.31 | 63 | C8 or above (Highway) | 3,500.00 | 84,000.00 | 18.12.2025 | 77 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha,**
**Puttur .**
21/08/2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.08.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமெரிக்க புலம்பெயர் அமைப்புகள் செய்ய வேண்டியது?

ஒரு கூற்றுண்டு - அதாவது, "நித்திரை கொள்பவர்களை எழுப்ப முயற்சிக்கலாம் ஆனால், நித்திரை கொள்வதுபோல் நடிப்பவர்களை ஒருபோதுமே எழுப்ப முடியாது." தமிழ் அரசியல் சூழல் இப்படியானதொரு நிலையிலேயே இன்றிருக்கிறது. தாங்கள் செய்வது முற்றிலும் பொருத்த மற்றது என்பதை அறிந்தே ஏதோ செய்ய வேண்டும் என்பதற்காக செயல்படுபவர்களை திருத்துவது மிகவும் கடினமானது.

களத்தில் இருப்பவர்கள் தேர்தல் அரசியல் போட்டிக்குள் சிக்குண்டு, பதவி மோகத்தில் தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கும்போது முற்றிலும் வேறுப்பட்ட ஜனநாயக சூழலுக்குள் - அதிலும், உலக அரசியலைத் தீர்மானிக்கும் மேற்குலக தலைநகரங்களில் நிலைகொண்டிருக்கும் புலம்பெயர் அமைப்புகளின் செயல்பாடுகளோ நகைப்புக்கிடமாக இருக்கின்றன. அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் புலம்பெயர் அமைப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கூட்டுக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கின்றன.

அதாவது, யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும்கூட பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றகரமான விடயங்கள் நடைபெறவில்லை. அந்த அடிப்படையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதில் தாம் ஏமாற்றமடைந்திருப்பதாகவும் அவை சுட்டிக்காட்டியிருக்கின்றன. இதனைச் சுட்டிக்காட்டுவதற்கு எதற்கு கடிதம்?

மேற்குலக நாடுகளில் சிதறி வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பலர் தங்களை அமைப்புகளாக முன்னிறுத்தியிருக்கின்றனர். அவ்வாறானவர்கள் கடந்த பதினாறு வருடங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனரென பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர். ஆனால், இத்தனைக்குப் பிறகும் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க். ஜனாதிபதி அநுர குமாரவிடம் உள்ளக பொறிமுறையை வலியுறுத்திச் சென்றிருந்தார். இது எதனைக் காட்டுகிறது? ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் எல்லை அவ்வளவுதான்.

இதற்கு அடிப்படையான காரணம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் சுயாதீனமாக செயலாற்ற முடியாமையாகும். அதிகாரம்மிக்க நாடுகளின் பிடிக்குள் உலக அரசியல் சிக்குண்டிருப்பதால் ஐ.நாவால் பெரியளவில் விடயங்களை கையாள முடியாதுள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவில் இயங்கும் புலம்பெயர் அமைப்புகள் உண்மையில், கடிதம் எழுத வேண்டியது ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அல்ல - மாறாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை நோக்கியே அவர்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

நாடுகள் தொடர்பான அமெரிக்க அணுகுமுறைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தாலும்கூட மனித உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தை ஒரு வெளிவிவகார நிலைப்பாடாகக் கொண்டிருக்கும் நாடுகளில் முதன்மையானது அமெரிக்காவாகும். ஆனால், அமெரிக்காவில் இருக்கும் புலம்பெயர் அமைப்புகளோ அமெரிக்காவை நோக்கி செயல்பட்டால் பத்தோடு பதினொன்றாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதங்கள் அனுப்புவதில் திருப்தி கொள்கின்றன. மனித உரிமைகள் பேரவையின் விடயத்தை களத்திலிருக்கும் கட்சிகள் பார்த்துக் கொள்ளும். புலம்பெயர் அமைப்புகளின் செயல்பாடுகளோ தாங்கள் நிலைகொண்டிருக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும். பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னரும்கூட, இதனை விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்தால் என்ன செய்ய முடியும்?

## யாழ் மருத்துவர் சங்க ஏற்பாட்டில் வீதி விபத்து விழிப்புணர்வு நிகழ்வு





யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சங்க ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வீதி விபத்து விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று இடம்பெற்றது.

அண்மைக் காலமாக நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகமாக உள்ளதால் இவ்வாறான விழிப்புணர்வு கருத்தரங்கு மூலம் விபத்துக்களை குறைப்பது இதன் நோக்கமாகும்.

இதில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், போக்குவரத்து ஆணையாளர், சட்ட வைத்திய நிபுணர் க.மயூரன், சிறுவர் குழந்தை சத்திர சிகிச்சை நிபுணர் ப.சஜந்தன், உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ-05)

## யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 21

இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டு அமைச்சு போன்ற அமைப்புகள் பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அதனடிப்படையில் பல பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் நேற்று யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் துறைசார் வல்லுநர்களின் பிரசன்னத்துடன் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மாவட்டத்தின் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடும் பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சட்டவிரோதமாக வெட்டப்பட்டு கடத்தப்படும் மருத மரங்கள்!

### தடுக்குமாறு வவுனியா மக்கள் கோரிக்கை

வவுனியா, ஓக. 21

வவுனியா குளத்தின் ஆற்றுப்பகுதியில் நிற்கும் பழமையான மருத மரங்கள் இனம்தெரியாத குழுக்களால் வெட்டிக் கடத்தப்படுவதாக கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


வவுனியா குளத்தில் இருந்து தாண்டிக்குளத்திற்கு செல்லும் ஆற்றின் கரைகளில் பழமையான மருத மரங்கள் அதிகளவில் நிற்கின்றன. பூந்தோட்டம் வீதி யூடாக குருக்கறுத்துச் செல்லும் அந்த ஆற்றின் கரைகளில் நிற்கும் குறித்த மரங்கள் அண்மை நாட்களாக இனந்தெரியாத நபர்களால் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு கடத்திச்செல்லப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்துக்கு பின்புறமுள்ள பகுதியிலேயே இவ்வாறு மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

சொற்ப நாட்களில் 7 வரையான மரங்கள் அடியோடு அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குறித்த சட்டவிரோத செயற்பாட்டை உரியதிணைக்களங்கள் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 21 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 05
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : துவாதசி




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசாங்கத்தாலும் அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு.

**இடபம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குலப்பங்கள் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உடல் நலம் சீராகும். அழகும் இளமையும் கூடும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பணியாற்றினால் டென்ஷன் ஏற்படும். நேர்மறை எண்ணாங்கள் தேவைப்படும் நாள்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்து போங்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். அனாவசிய செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். புகழ் கூடும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். நட்பு வட்டம் விரியும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் பிறகும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். பயணாங்கள் திருப்திகரமாக அமையும். கூடுதல் லாபம் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். அடுத்தவர்களை குறைக் கூறுவதை நிறுத்துங்கள். கவனம்தேவைப்படும் நாள்.

**தனுசு**
பிள்ளைகள் கேட்டதை வாங்கி தருவீர்கள். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. புதியவர்கள் நண்பர்களாவார்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள்.- அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்றுமதத்தவர் உதவுவார்கள்.

**மீனம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

# அன்னதானம்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். மாநகர சபை நீர்வேலைப் கலியுகவரதன் இந்து மன்றத்தால் நல்லூர் பெருந் திருவிழா காலத்தில் வழமை போன்று தேர்த் திருவிழாவான இன்று வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழாவான நாளை வெள்ளிக்கிழமையும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாநகர சபையின் அருகாமையிலுள்ள ஆயுள்வேத மண்டபத்தில் இந்த இரு நாட்களும் அன்னதானம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நல்லூரில் இலவச மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் லயன்ஸ் சர்வதேச மாவட்டம் 306 டி 12 நடத்தும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் மாலை 05.00 மணி தொடக்கம் நடைபெறும் என்று மாவட்ட ஆளுநர் லயன் கே. எம். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ முகாமில், கண் பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்கல், இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் நீரிழிவு பரிசோதனை என்பன நடைபெறும்

நேற்று முதல் ஆரம்பமான இந்த மருத்துவ முகாமில் மருத்துவ தேவையுள்ளவர்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, குறித்த நாட்களில், லயன்ஸ் கழகத்தின் கார்னிவெல் நிகழ்வும் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று...!

யாழ்ப்பாணம், ஓக. 21

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசையரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - சைந்தவி கேதீஸ்வரன், வயலின் - கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங்கம் - கண்ணதாசன் இசைநிலவன், முகர்சிங் - சேதிலிங்கம் சிவயெனன் நடைபெறும். இதனைத் தொடர்ந்து, பாட்டு- அழகேசன் அமிர்தலோஜன், அழகேசன் அமிர்தசிந்துஜன். வயலின் - கார்த்திகேசு குகபரன், மிருதங்கம் - கணபதிப்பிள்ளை கஜன், கெஞ்சிரா - நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா, கடம் - குமாரசாமி ரவிசங்கர், முகர்சிங் - சிங்கர் செந்தூரன் அரங்கேறும். (ஐ)

# கிளிநொச்சி கம நல சேவை நிலையம் தொடர்பாக அமைச்சரிடம் முறைப்பாடு

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி கம நல சேவை நிலையத்தால் வயல் காணி உரிமையாளர் அல்லாதவர்களிடமிருந்து முறையற்ற விதத்தில் ஏக்கர் வரி அறவிடப்பட்டுள்ளது. அத்துடன், உரிய ஆவணங்கள் இல்லாது உர மானிய விடுவிப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் கிளிநொச்சிக்கு வருகை தந்த விவசாய அமைச்சரிடமே இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கமநல சேவை நிலையம், கண்டாவளை கமநல சேவை நிலையம், பரந்தன் கம நல சேவை நிலையம் ஆகியவற்றில் கீழான பயிர்ச்செய்கை காணிகள் பலவற்றில் முறைகேடுகள் காணி மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பல முறைப்பாடுகளை முன்வைத்திருந்தனர். இந்த நிலையிலேயே கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சிக்கு வந்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே. டீ. லால் காந்தவிடம் குறித்த முறைகேடுகள் தொடர்பில் நேரடியாக ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இதன்போது, மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள 28 ஏக்கர் காணிக்கு மூன்று தடவைகள் ஒரே நேரத்தில் அரச மானியம் வழங்கப்பட்டுள்ளது என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட் டது. (ஐ)

# நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் ஜூலை 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10.00 மணிக்கு " தெய்வீகக் கலை அர்ச்சனை " நிகழ்வு இடம்பெறுகிறது.

அந்தவகையில் இன்று வியாழக்கிழமை சிவகுமார் கஜவதனனின் இசைக்கச்சேரி நிகழ்வும் , செல்வி சஹானா முரளீதரனின் பக்திக் கானங்களும், வைத்திய கலாநிதி பேரானந்த ராஜா டினேஜன் குழுவினரின் வீணை இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் அறிவித்துள்ளார். (அ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளரின் அதிரடி செயல்பாடு

கிளிநொச்சி, ஓக. 21

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சோரன்பற்று கிராமத்தில் நீண்டகாலமாக வெள்ள அனர்த்த நிலை காணப்படுவதாக அறிந்த தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அதற்கான தீர்வை உடனடியாக பெற்று கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் வெள்ள அனர்த்தங்களின்போது சோரன்பற்று கிராமத்தில் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். குறித்த வெள்ள அனர்த்த நிலைமைகளின் போது மட்டுமே அதிகாரிகள் வருகை தந்து குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதாகவும் பின்னர் அவற்றை கைவிட்டு சென்று விடுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதனால் தாம் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதாக கிராம மட்ட அமைப்புக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சுப்ரமணியம் சுரேனிடம் தெரிவித்ததை தொடர்ந்து தவிசாளர் உடனடி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

அடுத்த அனர்த்த முன்னாயத்த நிலைமைகளை கருத்தில் கொண்டு குறித்த பிரதேசத்தில் இருந்து வெள்ளம் வடிந்து ஓடக்கூடிய இடத்தை அடையாளப்படுத்தி அமைப்புகளுடன் சேர்ந்து பிரதேச சபை வடிகால் அமைப்பு வசதியை அவர் மேற்கொண்டார்.

இவ்விடயங்களை தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் நேரடியாக சென்று பார்வையிட்டார். அவருடன் சபையின் உபதவிசாளர் சிவகுரு செல்வராஜா மற்றும் கிராமமட்ட அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் என்ன பலரும் கலந்து கொண்டனர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எவ்வித நாணய அச்சிடலிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை!

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த



கொழும்பு, ஓக. 21

**தற்போதைய காலகட்டத்தில் அரசாங்கம் எந்தவொரு நாணய அச்சிடலிலும் ஈடுபடவில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.தற்போதைய அரசாங்கத்தின் கீழ் 1.2 ட்ரில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டுள்ளதாக அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

எனினும், அந்த அறிக்கை வேண்டுமென்றோ அல்லது அறியாமையால் வெளியிடப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்துக்குநாணயத்தை அச்சிட முடியாதென்றும், அதற்கு சட்டபூர்வ அடிப்படை இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தநிலையில் குறித்த தகவல் சமூகத்தை முற்றிலும்தவறாக வழிநடத்துவதாக அமைந்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் 1.6 ட்ரில்லியன் நாணய இருப்பு உள்ளதுடன், பண விநியோகம் 15 ட்ரில்லியனை நெருங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# தபால் தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்கின்றது

கொழும்பு, ஓக. 21

பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்து வரும் தபால் தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

அமைச்சருடன் முறையான கலந்துரையாடலைக் கோரி இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாகதபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள்சங்கத்தின் தலைவர் ஜி.ஜி.சி. நிரோஷனதெரிவித்துள்ளார்.

இதேவேளை, வரவு நேரப் பதிவுக்காக கைரேகை இயந்திரம் நிராகரிக்கப்பட்டதாக வெளியான குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பாணவைஎன அவர்குறிப்பிட்டார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டபிரதி தபால்மா அதிபர் சமீஷா டி சில்வா, கைரேகை இயந்திரத்தை செயல்படுத் துவதே தொழிற்சங்கத்தினரின் பணிப் புறக் கணிப்புக்கானகாரணம் என தெரிவித்துள்ளார். (அ)

# சிறைக்குள் சயனைட்!

கொழும்பு, ஓக. 21

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் நடத்தப்பட்ட சோதனையின்போது, சிறை அதிகாரிகள் ஒரு சயனைட் குப் பியைக் கண்டுபிடித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் காரரான குடு சலிந்துவின் உதவியாளரான தரிந்து மது சங்க என்பவரிடம் இருந்துகுறித்த சயனைட் குப்பி கண்டு பிடிக்கப் பட்டதாகசிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொமாண்டோ கவிஷ்க குமாரவைக் கொலைசெய்வதற்காக இந்த சயனைட் குப்பிசிறைச்சாலைக்குள் கொண்டு வரப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைக்குள் கொண்டுவரப்பட்ட சயனைட்டை ,பரிசோதிப்பதற்காக அதனைக் கொண்டு வந்த குழு, ஒருபல்லியைப் பிடித்து அதற்கு ஊசி மூலம்செலுத்தியதாகவும், பல்லி சம்பவ இடத்திலேயே இறந்ததாகவும் தெரியவந்துள்ளது.

(அ)

# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கான அவசரத் திட்டம் இல்லை

கொழும்பு, ஓக. 21

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை களைதிருத்துவதற்கான திட்டங்கள் எதுவும் தற்போது இல்லை என பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

எனினும், அவை அவ்வப்போது மதிப்பாய்வுசெய்யப்பட்டு திருத்தப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நிலையியற் கட்டளைகளில் உள்ள தெளிவின்மைகள் கடந்த காலங்களில் நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தியிருந்தன. எனினும் தற்போது மாற்றங்களுக்கான கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் என்பதுசபையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடைமுறை,விவாதம் மற்றும் நடத்தையை ஒழுங்குபடுத்தும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளாகும்.

பாராளுமன்றம் ஒழுங்கான மற்றும் பயனுள்ளமுறையில் செயல்படுவதை உறுதி செய்வதே அவற்றின் முதன்மை நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் கஞ்சாவை பயிரிட அனுமதி இலங்கை மருத்துவர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 21

வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் கஞ்சா பயிரிட அனுமதிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவை இலங்கை மருத்துவ சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளது.

இத்தகைய அனுமதியினால் கடுமையான சுகாதார, சமூக மற்றும் பொருளாதார அபாயங்கள் ஏற்படும் என அந்த சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு எச்சரித்துள்ளது.

மருத்துவ பயன்பாட்டுக்கு கஞ்சாவை பயிரிடுவதை நியாயப்படுத்துவது தவறானது என்று மருத்துவ சங்கம் குறிப்பிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல் மருத்துவ கஞ்சாவுக்காக உலகளாவிய தேவை குறைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பான தோட்டங்களை பராமரிப்பது சாத்தியமற்றது என்றும், உள்ளூர் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிக்கும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

மனநோய், போதை பழக்கம், நுரையீரல் நோய் மற்றும் வீதி விபத்துகள் போன்றனவும் அதிகரிக்கக் கூடும் எனவும் எச்சரித்துள்ளது.

(அ)

# வைத்தியரின் மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 21

சிறைச்சாலை மருத்துவமனையில் கைதி ஒருவரை அனுமதித்து அவரை அங்கு தங்கவைத்து சிகிச்சை அளித்ததற்காக 1.5 மில்லியன் ரூபாய் இலஞ்சம்பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அங்கொடை தேசிய மனநல நிறுவனத்தின் முன்னாள் பிரதிபணிப்பாளர் வைத்தியர் நயனஜித் ஹேமந்த ரணசிங்கவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மேலும்விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க உத்தரவிட்டார்.

சந்தேக நபருக்காக ஆஜரான சட்டத்தரணி, தனது வாடிக்கையா ளர் ஒரு வைத்தியராக இருந்தாலும்,அவரது மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கூறிய சிறைக்கைதியின் மனைவிக்கு வங்கிக் கணக்கு எண்வழங்கப்பட்டிருப்பது ஒரு விபத்து என்றும்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தன்னிடமிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும், சந்தேக நபர் தனது சகோதரர்களில் ஒருவருடன் நடத்தும்வணிகத்தின் வாடிக்கையாளர்களுக்கும் கணக்கு எண்ணை வழங்கும் பழக்கத்தின் ஒரு பகுதியாக,நோயாளியின் மனைவிக்கும் அவர் வங்கிக் கணக்குஎண்ணை வழங்கினார்.

சம்பவம் தொடர்பாக முறைப்பாடு அளித்தவரின் உரிமைகளுக் காக ஆஜரான மூத்த சட்டத்தரணி வசந்த பிடிகல, இது தற்செயலான செயல் அல்ல. மாறாகவேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் என்றுதோன்றுகிறது என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணையகத்தின் சார்பில் ஆஜரான பிரதிப் பணிப்பாளர் சுலோச்சனஹெட்டியாராச்சி, சந்தேக நபரின் வங்கிக் கணக்கில் பலசந்தர்ப்பங்களில் ஐந்தாயிரம், பத்தாயிரம் மற்றும்அதற்கு மேற்பட்ட தொகை பணம் வந்துள்ளதாகவும்,அந்தப் பணம் அவரது கணக்கில் வைப்பு செய்யப்பட்டதுகுறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாகவும் கூறினார்.

சந்தேக நபரை பிணையில் விடுவிப்பது மேலும்விசாரணைகளுக்கு இடையூறாக இருக்கும் என்பதால்பிணை வழங்கவேண்டாம் என்று நீதிமன்றத்தை அவர்கோரினார்.

(அ)

# கயந்த கருணாதிலக்க எம்.பி. சபாநாயகருடன் திடீர் சந்திப்பு

கொழும்பு, ஓக 21

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்குஎதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்றுநடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரை யாடலுக்கு எடுத்துக்கொள்ளுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் மாலை சபாநாயகருடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என அரசாங்கத்தினுள் சில கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்த பிரேரணை தொடர்பான இறுதி முடிவை அரசாங்கம் அல்ல, சபாநாயகரே எடுக்க வேண்டும்.

எனவே, இதுதொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கட்டாயமாக கலந்துரையாடப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தெனியாயவுக்கு ரூ.6 பில்லியன் செலவில் மிகவிரைவில் புதிய நவீன மருத்துவமனை

கொழும்பு, ஓக. 21

பழமையான மருத்துவமனைக்குப் பதிலாக,தெனியாயவில் நவீன வசதிகளுடன் கூடிய 300 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டப்படும் என்று சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில்ஜாசிங்க மற்றும் தென் மாகாண ஆளுநர் பந்துலஹரிச்சந்திர ஆகியோர் தலைமையில் அண்மையில்இடம்பெற்ற கூட்டமொன்றில் இந்த திட்டத்துடன்தொடர்புடைய நிதி, சமூக மற்றும் சுற்றுச்சூழல்வசதிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

தற்போதுள்ள மருத்துவமனைமனை சரிவு அபாயத்துக்கு உள்ளாகியுள்ளமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரூ. 6 பில்லியன் செலவில் ஹேண்ட் போர்ட் பெருந்தோட்டத்தில் 29 ஏக்கர் பரப்பளவில் புதியமருத்துவமனை கட்டப்பட உள்ளது.

இதற்கான நிர்மாணப்பணிகள் 2026 ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு கட்டங்களாக முடிக்கப்படும் என தெரிவக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ் 205 படுக்கைகளை கொண்டகட்டடங்கள் அமைப்படவுள்ளதுடன், இதில் ஆண், பெண், குழந்தைகள் மற்றும் மகப்பேறு அறைகள், அறுவைசிகிச்சை அறைகள், அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்துமற்றும் இரத்த வங்கி ஆகியவையும் இதில் உள்ளடங்கவுள்ளன.

இந்தத் திட்டத்தில் மருத்துவ ஊழியர்களுக்கான தங்குமிடம் மற்றும் பொது போக்குவரத்தைப் பயன்படுத்தும் நோயாளிகளுக்கு தனி நுழைவாயில் என்பனவும் அமைக்கப் படவுள்ளன.

மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் வடிவமைப்பு மற்றும் பொறியியல் ஆதரவுடன், அரசாங்க ஒதுக்கீடுகள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் மூலம் இந்தத் திட்டத்திற்கு நிதியளிக்கப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு பகுதியில் புஷ்வாணமான ஹர்த்தால்

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க



கொழும்பு, ஓக. 21

**வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் புஷ்வாணமாகியுள்ளது என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்தார்.

"வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் தொடர்பில் சபையில் பேசப்பட்டது. அது புஷ்வாணமாகிவிட்டது. எனவே, வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எமது மரியாதையை, கௌரவத்தை இத்தருணத்தில் செலுத்துகின்றோம்.

நாட்டு மக்கள் இனவாத அரசியலை நிராகரித்துள்ளனர். கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலின்போது இது நிரூபணமானது.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் இனவாதத்துக்கு இடமில்லை என்ற செய்தியை மீண்டும் வழங்கியுள்ளனர்.

தமது இருப்புக்காக சுமந்திரனும் இன வாத அரசியல் நடத்தும் நிலைக்கு வந்துவிட்டார்." - எனவும் பிரதி அமைச்சர் குற்றஞ்சாட்டினார். (அ)

# கட்டுநாயக்க கருமபீடம் மூலம் 1338 சாரதி அனுமதிப் பத்திரம்!

கொழும்பு, ஓக. 21

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகம் திறக்கப்பட்டதிலிருந்து மொத்தம் 1,338 சாரதி அனுமதிப் பத்திரங்கள் வெளிநாட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் 3 ஆம் திகதி அமைக்கப்பட்ட பிரத்தியேக உரிமம் வழங்கும் கருமபீடம், இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டினரின் வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஓகஸ்ட் 3 முதல் 17 வரை மொத்தம் 1,338 சாரதி அனுமதிப் பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டன.

முன்னதாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற வெரஹெரவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது.

இதற்கிடையில், தேசிய சுற்றுலா சாரதிகள் சங்கம் இந்த முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

2,000 ரூபாவுக்கும் குறைவான விலையில் வெளிநாட்டவருக்கு சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொழில்முறை சுற்றுலா சாரதிகளின் வாழ்வாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக அது சுட்டிக்காட்டுகிறது. (அ)

# 10ஆயிரம் இலங்கையர்களுக்கு தாய்லாந்தில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஓக. 21

தாய்லாந்தின் அமைச்சரவை 10,000 இலங்கையர்களை வேலைக்கு அமர்த்த ஒப்புதல் அளித்துள்ளதாக தாய்லாந்து மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கொடிய எல்லை மோதலைத் தொடர்ந்து கம்போடிய தொழிலாளர்கள் நாடு திரும்புவதால் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முயற்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து, வயதான மக்கள் தொகை மற்றும் சுருங்கி வரும் பணியாளர்கள் எண்ணிக்கை என்பவற்றினால் விவசாயம், கட்டுமானம் மற்றும் உற்பத்தித் துறைகளில் குறைந்தது 3 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களை நம்பியிருக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

வேலைவாய்ப்புக்காக இலங்கையில் இருந்து 30,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

மேலும், முதல் கட்டத்தில் 10,000 பேர் தாய்லாந்துக்கு அனுப்பப்படுவார்கள் என்று தாய்லாந்தின் தொழிலாளர் அமைச்சர் பொங்காவின் ஜங்ருங்ருங்ராங்கிட் கூறினார்.

இது நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் விண்ணப்பிக்க அனுமதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பேலியகொடையில் ஒருவர் கொலை!

கொழும்பு, ஓக. 21

பேலியகொடை - வெதமுல்ல பகுதியில் ஆயுதமொன்றினால் தாக்கப் பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். பேலியகொடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களனி, வெதமுல்ல பகுதியைச் சேர்ந்த 46 வயதானவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருவருக்கிடையிலான வாய்த்தர்க்கம் மோதலாக மாறியமையே இந்தக்கொலைச் சம்பவத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# 323 கொள்கலன்கள் குறித்து அரசு உண்மையை கண்டறியவேண்டும்!

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஓக. 21

"323 கொள்கலன்கள் தொடர்பில் புதிய பொலிஸ்மா அதிபர் விசாரணைகளை மேற் கொண்டு, உண்மையை கண்டறிய வேண்டும்."-என்று பொது ஜன பெரமுன கட்சி வலியுறுத் தியுள்ளது.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் கூறியவை வருமாறு-

மத்திய வங்கி பிணைமுறி மோசடியைவிட கொள்கலன் மோசடி பாரதூரமானது. புலிகளின் ஆயுதங்கள் கொள்கலன்களில் வந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் கருத்து வெளியிட்டார். எனவே, மேற்படி கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்தனவா, போதைப்பொருள் இருந்ததா, நிதி இருந்ததா என்பது பற்றி எவருக்கும் தெரியாது. அது பற்றி எவ்வித தகவலும் இல்லை.

323 கொள்கலன்கள் என்பது சாதாரண விடயம் அல்ல. அவற்றை வீதியில் நிறுத்தி வைத்தால் 5 கிலோ மீற்றர் தூரம் அளவுக்கு இருக்கும்.

புதிய பொலிஸ்மா அதிபர் வெளிப்படைதன்மையுடன் செயற்படுவாரானால், இந்த கொள்கலன் மோசடி தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய மோசடி இதுதான். நிதி அமைச்சு, துறைமுகங்கள் அமைச்சு என்பன இதனுடன் தொடர்புபட்டுள்ளன. எனவே, உரிய விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

# ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட கலந்துரையாடல்!



கொழும்பு, ஓக. 21

2025 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த மீளாய்வு மற்றும் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை முறையாகப் பயன்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிக்கும் திட்டங்களை திறம்பட செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இதன்போது அறிவுறுத்தினார்.

இதன் மூலம் கிராமங்களுக்கு பணம் சீராகச் செல்வதோடு கிராமப்புற பொருளாதாரம் வேகமாக வளர முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சம்பந்தப்பட்ட திட்டங்களை முறையாகவும் திட்டமிட்ட முறையில் செயல்படுத்துவதும், இந்த நன்மைகளை மக்களுக்கு வழங்குவதும் அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பு என்றும்ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமூகத்தில் மாற்றுத்திறனாளிகள் சமூகம் குறித்து அதிக கவனம் செலுத்தவும், அவர்கள் சமூகத்தில் பின்தங்கியவர்களாகக் கருதப்படுவதைத் தடுக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்கவும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். சமூக சேவை அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டங்களுக்காக எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் அவர் அறிவுறுத்தினார்.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரஸல் அபோன்சு, கபில ஜனக பண்டார, நிதி அமைச்சு மற்றும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துகளை கட்டுப்பாடுகளுடன் நீக்குவதற்கு ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 21

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை சில கட்டுப்பாடுகளுடன் நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

"முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை மட்டுப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தால் ஆதரவளிக்கப்படும்.

அதேபோல கஷ்டத்துக்கு மத்தியில் வாழும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். மருந்துகூட வாங்க முடியாத நிலையில் சிலர் உள்ளனர்.

எனவே, உரிய மதிப்பாய்வுகளை செய்து ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் பலமாக உள்ளவர்களுக்கு தேவை இல்லை." - எனவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார். (அ)

# தேவையான தரநிலை இல்லாது பட்டம் பெற்றோர் ஆசிரியர் சேவைக்குள் சேர்க்கப்படமாட்டார்கள்!

கொழும்பு, ஓக. 21

தேவையான தரநிலைகளைப் பூர்த்தி செய்யாது கல்வி இளங்கலைப் பட்டம் பெற்ற நபர்கள் இனி ஆசிரியர் சேவையில் சேர்க்கப்படமாட்டார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்கள் வழங்கும் கல்வி இளங்கலைப் பட்டங்களின் தரத்தை மதிப்பிடுவதற்கு ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்குத் தேசிய தரநிலைகளுக்கு இணங்கும் பட்டங்கள் மட்டுமே செல்லுபடியாகும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவையாளர்கள் விடுமுறை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக. 21

சுகாதார அமைச்சின் ஊழியர்கள் விடுமுறை பெறுவதால், அமைச்சின் கடமைகள் மற்றும் அத்தியாவசியப் பணிகளைத் தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளுக்கான அனுமதியை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்த அந்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சின்செயலாளர்விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனில் ஜாசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் காணப்படும் அனைத்து பதவிகளுக்குமான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கான புதிய ஆட்சேர்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சிக்கு இலங்கை இலவச சுகாதார சேவை சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், வெளிநாட்டு விடுமுறைகளைப் பெறுவதற்கு நிறுவனக் குறியீட்டில் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள், சுகாதார அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் இல்லாது போவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம், பொது நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட உள்ளூர் விடுமுறை உரிமையும் அதன்மூலம் ரத்தாவதாக அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ரோய் டி மெல் தெரிவித்துள்ளார்.

விசாக்கள் போன்றவற்றைப் பெற்றுள்ள சுகாதார ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த புதிய சுற்றறிக்கையால் கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது

## அமைச்சர் சந்தன அபேரத்ன



கொழும்பு, ஒக. 21

**மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியது. அதன் போது வாய்மூல கேள்வி நேரத்திலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.**

அரசாங்க நிர்வாக துறைகளுடன் தொடர்புடைய பிரிவுகளும் உள்ளன. பொதுமக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு எங்கள் அரசு உறுதியாக உறுதிபூண்டுள்ளது.

எனவே, தேர்தல்களை ஒத்திவைக்க மாட்டோம். இதற்கு அரசாங்கத்திற்கு எந்த தேர்தலையும் ஒத்திவைக்கும் எண்ணமில்லை.

பொதுமக்கள் பிரதிநிதிகளை நியமிக்கும் செயல்முறையில் ஏதேனும் தடைகள் இருந்தால், அவற்றை நீக்கி தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த நிலையிலும் மாகாண சபை நியமிக்கப்படும் வரை அமைதியாக காத்திருக்க முடியாது.ஆகையால், மாகாண சபைத் தேர்தல் எப்போது நடந்தாலும், அதுவரை வீதி அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய பராமரிப்பு நடவடிக்கைகளை அதிகாரப்பூர்வமாக முன்னெடுப்பதே எம்முடைய நோக்கமாகவுள்ளது-என்றார். (அ)

# நெதர்லாந்து துணைத் தூதர் மீன்பிடி அமைச்சருடன் பேச்சு

கொழும்பு, ஒக. 21

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகருக்கும், இலங்கைக்கான நெதர்லாந்தின் துணைத் தூதுவர் ஐவன் ரட்ஜன்ஸ்/க்கும் இடையே பாராளுமன்ற வளாகத்தில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி. கே. கோலித்த கமல் ஜினதாசவும் கலந்துகொண்டார். இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று மற்றும் கலாசாரத் தொடர்புகளை நினைவுகூர்ந்த துணைத் தூதுவர் ரட்ஜன்ஸ், இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள டச்சு பாரம்பரியங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவத் தையும், புதிய அபிவிருத்தி திட் டங்களை அமுல்படுத்துவதன் அவசியத் தையும் சுட்டிக்காட்டி னார்.

தங்கள் நாட்டு நிபுணர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளதாகவும், அந்த மரபுகளைப் பாதுகாக்க உதவ ஆர்வமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், இலங்கையின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத் துறையின் அபிவிருத்திக்காக நெதர்லாந்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பான பல விடயங்களை முன்வைத்தார்.



மணல் படிந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்திற்கு தொழில்நுட்பத் தீர்வொன்றை வழங்குமாறு அமைச்சர்கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த துணைத் தூதுவர் ரட்ஜன்ஸ், இப்பகுதிக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய முன்னணி டச்சு நிறுவனங்களுடன் இது குறித்து கலந்துரையாடுவதாகவும், முன்மொழியப்பட்ட தொழில் நுட்பத் தீர்வு வெற்றி பெற்றால், அதற்குச் சலுகைக் கடன் வசதியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும் குறிப்பிட்டார்.

வாழைச்சேனை நீரேரியில் மீன்பிடிப் படகுகளை நிறுத்துவதற்கு கொங்கிரீட் துறைமுகங்களுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மிதக்கும் துறைமுகங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இந்தத் துறையில் இலங்கைக்கு முன் அனுபவம் இல்லாததால், அதன் சாத்தியக்கூறுகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டை நடத்துமாறும், அதற்குத் தேவையான நிபுணத்துவத்தை வழங்குமாறும் கோரினார்.

நீர்ப்பூண்டுகளின் நுண் பெருக்கம் தொடர்பில் நெதர்லாந்து உலகிலேயே முன்னணி நிபுணத்துவத்தைக் கொண்டிருப்பதால், அந்த அறிவை இங்குள்ள நாரா, நக்ரா மற்றும் தனியார் துறைக்கும் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு நிபுணரின் உதவியை வழங்குமாறு அமைச்சின் செயலாளர் கோரினார். இந்தத் துறை குறித்துத் தான் அறிந்து கொண்டமைக்கு நன்றி தெரிவித்த துணைத் தூதுவர் ரட்ஜன்ஸ், தமது நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடி அறிவைப் பகிர்ந்துகொள்ளும் திட்டத்திற்கு உதவுவதாக உறுதியளித்தார். (அ)

# தூக்கமின்மையால் அவதிப்படும் சஷீந்திர!

கொழும்பு, ஒக. 21

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தூக்கமின்மையால் அவதிப்படுவதாகவும், எனவே அவரது உடல்நிலைக்கு மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்தை ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சஷீந்திர ராஜபக்ஷ நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது இந்த தகவல் வெளியிடப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள், தூக்கமின்மைக்கு மருத்துவ உதவி வழங்கப்படாவிட்டால், அவர் உயர் இரத்த அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றும், அது மரணத்துக்கு வழிவகுக்கும் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எனவே, தனது கட்சிக்காரரை தொடர்ந்து விளக்கமறியலில் வைப்பது அவர் பரீட்சைக்கு வருவதற்கான வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடும் என்றும், பிணை வழங்குவதைத் தீர்மானிப்பதில் இதை ஒரு முக்கிய காரணியாகக் கருதுமாறும் நீதிமன்றத்தில் கோரினர்.

எவ்வாறெனினும், முன் வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட கொழும்பு நீதவான், சஷீந்திர ராஜபக்ஷவை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்தை ஊழல் மற்றும் தவறாகப் பயன்படுத்தியது தொடர்பான விசாரணை தொடர்பாக ஒகஸ்ட் 06 ஆம் திகதி இலஞ்ச ஒழிப்பு ஆணை யகம் சஷீந்திர ராஜபக்ஷவை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குருநாகலில் யானை தாக்கி தாயும் மகளும் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 21

குருநாகல் பிரதேசத்தில் யானை தாக்குதலுக்கு உள்ளாகி தாயும் மகளும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கச் சென்றவர்களே இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்தனர்.

உயிரிழந்தவர்கள் மஹாவ, நிகவலயாய மதியாவ பகுதியை சேர்ந்த 53 மற்றும் 28 வயதானவர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யானை தாக்கியதில் படுகாயமடைந்த தாயும் மகளும் அம்பன்பொல வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் இலங்கையின் தேயிலை!

கொழும்பு, ஒக. 21

இலங்கையின் தேயிலை நிலப்பரப்பு, யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளங்களுக்கான தற்காலிக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய கலாசார நிதியம் யுனெஸ்கோவுக்கு இதனைப் பரிந்துரை செய்துள்ளது. இலங்கையில் ஏற்கனவே அநுராதபுரம், சிங்கராஜ மற்றும் மத்திய மலைநாட்டுப் பாரம்பரிய தளங்கள் உள்ளிட்ட 8 பாரம்பரிய தளங்கள் குறித்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், மலைநாட்டில் உள்ள தேயிலைத் தோட்டங்களை உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கும் முயற்சி சுற்றுலாத்துறைக்கு பெரும் நன்மை பயக்கும் என அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை உலகிற்கு வெளிப்படுத்துவது இதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை, இந்த பரிந்துரையானது நுவரெலியா, கண்டி, சபரகமுவ, ஊவா மற்றும் சபரகமுவ பல்கலைக்கழகம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது எனவும், இது ஏனைய யுனெஸ்கோ தளங்களிலிருந்து வேறுபட்டது எனவும் பேராசிரியர் அதுல ஞானப தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு இல்லையேல் தொடர் போராட்டம்!

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் முனாஸ்



அம்பாறை, ஓக. 21

**நீண்ட கால சம்பள முரண்பாடுகளை சரி செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்பட்டால் வேலை நிறுத்தப்போராட்டம் தொடரும் என தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் முனாஸ் தெரிவித்தார்.**

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், நேற்று பல்கலைக்கழக முன்றலில் அமைதிவழி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்ததால் பல்கலைக்கழக செயற்பாடுகள் முடக்க நிலையை அடைந்திருந்தன.

ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.எம். முனாஸ் தலைமையில் நேற்று முழுநாள் அடையாள வேலை நிறுத்தத்திலும் பேரணியிலும் ஈடுபட்ட ஊழியர்கள், பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஒலுவில் பிரதான வீதி வரை ஊர்வலமாகச் சென்றனர்.

நீண்ட கால சம்பள முரண்பாடுகளை சரி செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை வெளிக்கொணருமுகமாக அனைத்துப் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விசாரா ஊழியர்கள் இந்த முழு நாள் அடையாள பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.

பொதுச் செயலாளர் எம். எம். முகம்மது காமில் உள்ளிட்ட ஊழியர் சங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் ஊழியர்களும் பங்குகொண்டனர். (அ)

# 'விவாதச் சமர் - 2025': வாக்புரி அணி வெற்றி!



அம்பாறை, ஓக. 21

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடத்திய "விவாதச் சமர் - 2025" போட்டியின் இறுதிச் சுற்று மற்றும் கௌரவிப்பு விழா கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை பல்கலைக்கழக தொழினுட்பவியல் பீடத்தின் பிரதான மண்டபத்தில், சிறப் பாகவும் உற்சாக மிகுந்தும் நடைபெற்றது.

தமிழ் மொழியின் வாக்கு வீரியத்தை மேடையில் இறக்கி, மாணவர்களின் அறிவுத்திறன், வாதத்திறன், சிந்தனை ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தும் முக்கிய குறிக்கோள்களை கொண்ட இப்போட்டி, பல வாரங்களாக பல்கலைக்கழக அளவில் முன்னெடுக்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களைச் சேர்ந்த முப்பத்தி மூன்று அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரில் - பல சுற்றுக்களைத் தாண்டி தேர்வு செய்யப்பட்ட இரண்டு அணிகள் இறுதியில் மோதின.

"வில்லெய்து பல சமர்க்களம் கண்டோம் சொல்லெய்து சமர் புரியும் களம் காண" என்ற அடிக்கோட்டோடு நடைபெற்ற இறுதிச்சுற்றில், வாக்புரி அணி மற்றும் சிந்தனைச் சிறகுகள் அணி எனும் இரு அணிகளும் பலத்த வாதப்பிரதிவாதங்களுடன் களமிறங்கின.

"இலங்கையில் மாறிவரும் கல்விச் சீர்திருத்த முயற்சிகள் கல்வியின் இலக்குகளை அடைந்துள்ளதுஃஅடையவில்லை" என்ற தலைப்பில் இரு அணிகளும் வாதிட்டன.

போட்டியில் தீவிரமான வாக்குமூலங்களும், புள்ளிவிவரங்கள், உள்ளூர் மற்றும் உலகளாவிய தகவல்களின் ஆதாரங்களுடனான வலுவான வாதங்களும் இடம் பெற்றன. ஆசியப் பாராளுமன்ற முறையைப் பின்பற்றி போட்டித்தொடர் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இறுதியில் வாக்புரி அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (அ)

## கல்முனையில் அறுவடை நிய்யத் நிகழ்வு




கல்முனை, ஓக. 21

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல், நாகூர் ஆண்டகை தர்கா நம்பிக்கையா ளர் சபை மற்றும் இறை வெளி கண்ட விவசாய அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அறுவடை நிய்யத் நிகழ்வு" சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.அஸீஸ் ஹாஜி, மௌலவி சபா முஹம்மது (நஜாஹி), பள்ளிவாசல் நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் செயற்பட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் தாங்கள் அறுவடை செய்யும் நெல் கொண்டு செல்லும் பாதை மிகவும் மோசமாக உள்ளதாலும் வாகனங்கள் செல்வதில் பாரிய பிரச்சினை உள்ளதாலும் அதனை சீர் செய்து தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவிடம் விவசாயிகள் மகஜர் ஒன்றை கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# காரைதீவில் களைகட்டியது நிருத்தியார்ப்பணம் நிகழ்வு



கல்முனை, ஓக. 21

கல்முனை முத்தமிழ் கலைக்கூடத்தின் "நிருத்தியார்ப்பணம்" பரதநாட்டிய நிகழ்ச்சி காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில், கலைக்கூடத்தின் தலைவர் சிவசிறி அடியவன் பிரமின் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது .

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவன பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி பாரதி கென்னடி கலந்து சிறப்பித்தார் .

கௌரவ அதிதிகளாக நிறுவனத்தின் நடனம் அரங்காற்றுகை திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரைசிங்கம் உஷாந்தி , மட்டக்களப்பு வலயக் கல்வி பணிமனையின் அழகியகல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி மலர்விழி சிவஞானசோதிகுரு, ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுல மாமணி வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

அழைப்பு அதிதிகளாக கல்முனை வலய நடன ஆசிரிய ஆலோசகர் ரிகே.நீசா பத்திரண மற்றும் திருக்கோவில் ஆசிரிய ஆலோசகர் திருமதி.தங்கமாணிக்கம் சிறப்பித்தார்கள் .

நடனத் துறையில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த ஐந்து மாணவிகளின் நடன ஆற்றுகைகள் சிறப்பாக நடைபெற்றன. (அ)

## இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையுடன் மட்டக்களப்பில் கிரிக்கெட் உபகரணம் கையளிப்பு

மட்டக்களப்பு, ஓக. 21

இலங்கை கிரிக்கட் சபையின் அனுசரணையுடன், விளையாட்டுத்துறை அமைச்சும் மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கமும் இணைந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டிற்கான உபகரணங்களை நேற்று வழங்கின.

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எந்திரி என்.பி.ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கடினப்பந்து கிரிக்கெட் விளையாடுகின்ற பாடசாலை [illegible] கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கும் உபகரணங்களும் பாதணிகளும் வழங்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சுதா சதாகரன், மட்டக்களப்பு கல்வி வலய உடற்கல்வி உதவி பணிப்பாளர் வி.லவக்குமார கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்கள் என பாடசாலை அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சீனா - இந்தியா கூட்டாளிகள்!

## இந்தியாவில் சீன வெளிவிவகார அமைச்சர்



புதுடில்லி, ஒக. 21

**சீனாவும் இந்தியாவும் போட்டியாளர்களாக அல்லாமல், கூட்டாளிகளாகப் பார்க்க வேண்டும் என்று சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி தெரிவித்துள்ளார்.**

இந்தியா சென்றுள்ள வாங் யி, இந்திய வெளிவிவகா அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், "இந்திய - சீன உறவுகள் ஒத்துழைப்புக்குத் திரும்புவதற்கான நேர்மறை போக்கைக் காட்டுகின்றன. இரு நாடுகளும் ஒன்றையொன்று போட்டியாளர்களாக அல்லாமல் கூட்டாளிகளாகப் பார்க்க வேண்டும். இந்தியா - சீனா இடையே தூதரக உறவு ஏற்பட்டு தற்போது 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. நாம் கடந்த காலங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"இரு நாடுகளும் சரியான உத்தி ரீதியிலான கருத்துகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நாடு மற்றொரு நாட்டை ஒரு வாய்ப்பாகப் பார்க்க வேண்டும். வளர்ச்சி மற்றும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் தங்கள் மதிப்புமிக்க வளங்களை இரு நாடுகளும் முதலீடு செய்ய வேண்டும்.

முக்கியஅயல் நாடு களான நாம், பரஸ்பர மரி யாதை மற்றும் நம்பிக்கையுடன் இணைந்து வாழ்வதற்கும், இணைந்து வளர்வதற்கும் ஏற்ப இரு தரப்புக்கும் வெற்றி தரக் கூடிய சரியான வழிகளை ஆராய வேண்டும். அயல் நாடுகளுடன் குறிப்பாக இந்தியாவுடன், நட்பு, நேர்மை, பரஸ்பர நன்மை, உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய கொள்கைகளை நிலைநிறுத்த சீனா தயாராக உள்ளது.", என்றும் கூறினார். (ஐ)

# திருப்பதி ஏழுமலையானுக்கு 121 கிலோ தங்கம் அன்பளிப்பு




அமராவதி, ஒக. 21

திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமிக்கு 121 கிலோ தங்கம் வழங்க பக்தர் ஒருவர் முன்வந்துள்ளார் என்று ஆந்திர பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

மேலும், "திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமிக்கு 121 கிலோ தங்கம் வழங்க பக்தர் ஒருவர் முன்வந்துள்ளார். இதன் மதிப்பு ரூ.140 கோடி (சுமார் 485 கோடி இலங்கை ரூபாய்). அவர் தனது பெயரை வெளிப்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொண்டார். எனவே, என்னால் சொல்ல முடியவில்லை.

வெங்கடேஸ்வர சுவாமியின் பக்தரான அவர், சொந்தமாக தொழில்தொடங்க வேண்டும் என பிரார்த்தனை செய்துள்ளார். அவரது பிரார்த்தனை நிறைவேறியது. இதையடுத்து, அவர் தனது நிறுவனத்தின் பங்குகளில் 60 சதவீதத்தை விற்றுவிட்டார். இது, 150 கோடி டொலர். இந்நிலையில், திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமிக்கு அணிவிக்கப்படும் நகைகள் குறித்து விசாரித்துள்ளார். ஒரு நாளைக்கு 120 கிலோ எடை கொண்ட தங்க நகைகள் சுவாமிக்கு அணிவிக்கப்படுகிறது என கூறியிருக்கின்றனர். எனவே, 121 கிலோ தங்கத்தை சுவாமிக்கு தானமாக வழங்க அவர் முன்வந்துள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

# சுவீடனில் இடம் மாற்றப்படும் பழமைவாய்ந்த தேவாலயம்!



ஸ்டாக்ஹோம், ஒக. 21

சுவீடனின் கிருனா நகரத்தில் அமைந்துள்ள 113 வருடங்கள் பழமையான தேவாலயத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு அந் நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதுள்ள இடத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகரத்துக்கு தேவாலயம் மாற்றப்படவுள்ளது.

உருளும் மேடையொன்றின்மீது தேவாலயம் தூக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் மணித்தியாலத்துக்கு 500 மீற்றர் வேகத்தில் மேடை நகர்கிறது. தற்போது மாற்றப்படவுள்ள இடத்துக்கு தேவாலயத்தை கொண்டு செல்ல இரு நாட்கள் ஆகும் என குறிப்பிடப்படு கிறது.

தேவாலயத்தை சுற்றியிருக்கும் பகுதியில் பிளவுகள் ஏற்பட்டதாலும் பல தசாப்தங்களாக குறித்த பகுதியில் இரும்புத் தாது வெட்டியெடுப்பதால் தரை நிலையற்றதாகி விட்டதாலும் தொடர்ந்து தேவாலயம் அங்கிருப்பது நல்லதல்ல என்பதாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இடம் மாற்றப்படும் தேவாலயம் 35 மீற்றர் உயரமும் 40 மீற்றர் அகலமும் 672 தொன் எடையும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன் போரை நிறுத்தவே இந்தியாவுக்கு வரி விதிப்பு!

வாஷிங்டன், ஒக. 21

உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தொடர்வதைத் தடுக்கவே இந்தியாமீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூடுதல் வரிகளை விதித்தார் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

"ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ட்ரம்ப் மிகப் பெரிய அழுத்தத்தைக் கொடுத்துள்ளார். இந்தியாமீது பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட பிற நடவடிக்கைகளையும் அவர் எடுத்துள்ளார். இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று அவர் தனக்குள் உறுதிமொழி கொண்டார். ட்ரம்ப் விரைவாக அமைதியைக் கொண் டுவர விரும்புகிறார்.

நேட்டோ பொதுச் செயலாளர் உட்பட அனைத்து ஐரோப்பிய தலைவர்களும் இது ஒரு சிறந்த முதல் படி என்று ஒப்புக்கொள்கின்றனர். மேலும், ஜெலன்ஸ்கி மற்றும் ட்ரம்ப் இருவரும் பேசப் போவது ஒரு நல்ல விசயம். அது நடக்க வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகிறார். இரு தரப்பு உறவை பலப்படுத்த அமெரிக்க அரசாங்கம் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளுடனும் இணைந்து செயல்படுகிறது என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.



அமெரிக்க மண்ணில் புடினுடன் ட்ரம்ப் ஆலோசனை நடத்திய 48 மணி நேரத்தில், ஐரோப்பிய தலைவர்கள் அனைவரையும் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் சந்தித்தார். எனவே, ஐரோப்பிய தலைவர்கள், ட்ரம்பின் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டதற்கும், இது குறித்த ரஷ்யாவின் நிலைப்பாட்டை தாங்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை அவர் ஏற்படுத்திக் கொடுத்ததற்கும் அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது முந்தைய நிர்வாகத்தால் செய்யப்படாத ஒன்று" - இவ்வாறு கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார். (ஐ)

# சீனாவில் வெள்ளத்தில் சிக்கி 13 பேர் உயிரிழப்பு



பீஜிங், ஒக. 21

சீனாவின் மஞ்சள் நதி உட்பட இரு ஆறுகளில் திடீர் வெள்ளத்தால் 13 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காணாமல் போயுள்ளனர்.சீனாவின் வடக்கு பிராந் தியத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இத னால் ஓர்டோஸ், பாவோடா உள்ளிட்ட நகரங்களில் வெள் ளம் ஏற்பட்டது. இதனால், ஆறுகளிலும் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியது.

இந்த நிலையில், மஞ்சள் நதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த சம் பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் ஓர்டோசில் உள்ள ஆற்றிலும் 3 பேரை வெள்ளம் அடித்துச் சென்றது. இவர்கள் மூவரின் சடலங்களும் மீட்கப் பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியை 98 ஓட்டங்களால் வென்றது தென்னாபிரிக்கா

கெய்ன்ஸ், ஒக. 20

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியை 98 ஓட்டங்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்கா அணி.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி. முன்னதாக இரு அணிகளுக்கும் இடையே நடந்த இருபது - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியிருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலன ஒருநாள் போட்டித் தொடர் நேற்று ஆரம்பமானது. கெய்ன்ஸ் நகரில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட அவுஸ்திரேலியா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 296 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் மார்க்ரம் 82 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பவுமா 65, மத்தியூ பிரீஸ்க் 57, ரியான் ரிக்கேல்ரன் 33 ஓட்டங்களை எடுத்தனர்.

அவுஸ்திரேலியா தரப்பில் டிராவிஸ் ஹெட் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.


இதனைத் தொடர்ந்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இதனால் 40.5 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியா சார்பில் மார்ஷ் 88 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து பென் வோர்ஷிஸ் 33 ஓட்டங்களையும் டிராவிஸ் ஹெட் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்காவின் கேசவ் மகாராஜ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது ஒருநாள் போட்டி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)






## பாகிஸ்தான் வீரர் ஒப்பந்தம்: அசாம், ரிஸ்வான் கீழிறக்கம்!

இஸ்லாமாபாத், ஒக. 20

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வீரர்கள் ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ளது. அதில், பாபர் அசாம், முகமது ரிஸ்வான் ஆகியோர் தங்களின் முந்தைய உயர் நிலையிலிருந்து கீழே இறக்கப்பட்டுள்ளனர்.

ஆசிய கிண்ண ரி - 20 தொடருக்கான அணியிலிருந்து பாபர் அசாம், ரிஸ்வான் நீக்கப்பட்டனர். இந்த நிலையில், இவர்கள் நிலை ஏ-யிலிருந்து பி-நிலைக்கு இறக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஏ பிரிவை இல்லாமலும் செய்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

பி பிரிவு வீரர்கள் - அப்ரார் அகமது, பாபர் அசாம், பகர் ஜமான், ஹாரிஸ் ரவூப், ஹசன் அலி, முகமது ரிஸ்வான், சயிம் அயூப், சல்மான் அலி ஆகா, ஷதாப் கான், ஷாஹின் ஷா அப்ரிடி.சி பிரிவு வீரர்கள் - அப்துல்லா ஷபீக், பாஹீம் அஷ்ரப், ஹசன் நவாஸ், முகமது ஹாரிஸ், முகமது நவாஸ், நசீம் ஷா, நோமன் அலி, ஷகிப்சதா பர்ஹான், சஜித் கான், சவுகத் ஷகீல்.

டி பிரிவு வீரர்கள் - அகமது டேனியால், /ஹசைன் தலத், குர்ரம் ஷஜாத், குஷ்தில் ஷா, முகமது அப்பாஸ், முகமது அப்பாஸ் அப்ரீடி, முகமது வாசிம் ஜூனியர், சல்மான் மிர்ஸா, ஷான் மசூத், சுஃபியான் மொகிம்.

இதில், பி பிரிவு வீரர்களுக்கு 30 இலட்சம் பாகிஸ்தான் ரூபாயும் சி பிரிவு வீரர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் டி-பிரிவு வீரர்களுக்கு 10 - 7.5 இலட்சம் பாகிஸ்தான் ரூபாயும் ஊதியமாக வழங்கப்படுகிறது. (ஐ)

## அர்த்தமற்ற போட்டிகளை பும்ரா தவிரப்பது சிறந்தது

### சுனில் கவாஸ்கர் அறிவுரை

புதுடில்லி, ஒக. 20

டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இத்தனை போட்டிகள் தான் ஆடுவேன் என்று பணிச்சுமையை குறைக்க பும்ரா முடிவெடுப்பதை விட, சில அர்த்தமற்ற ஒருநாள், ரி -20 தொடர்களில் விளையாடாமல் இருக்கலாமே. அவருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இந்தத் தொடர்களிலிருந்து ஓய்வு கொடுக்கலாம்தானே என்று சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சியில் பும்ரா மீதமுள்ள டெஸ்ட் போட்டிகளில் ஆடி இந்திய அணியை உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிக்குத் தகுதி பெறச் செய்வதுதான் முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தனியார் ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அவர் எழுதியுள்ள பத்தியிலேயே அவர் மேற்படி கூறியுள்ளார்.

## 5 ஓவர்களில் 5 விக்கெட்கள்

கெய்ன்ஸ், ஒக. 21

5 ஓவர்களில் வெறும் 9 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தி சாதித்துள்ளார் தென்னாபிரிக்காவின் கேஷவ் மகராஜ்.

தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையேயான ஒருநாள் தொடர் தற்போது நடந்து வருகிறது.

இதில், நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் தென்னாபிரிக்கா 98 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாடிய போது, மோர்னஸ் லபுஷாக்னே 01, கமரூன் கிறீன் 03, ஜோஸ் இங்கிலீஸ் 5, அலெக்ஸ் ஹேரி 0, அரோன் ஹார்டி 4 ஓட்டங்களில் அடுத்தடுத்து மகாராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

மகாராஜ் முதல் 4.2 ஓவரில் 9 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். பின்னர், அவரால் விக்கெட் வீழ்த்த முடியவில்லை. இந்தப் போட்டியில் அவர் 10 ஓவர்களை வீசி 33 ஓட்டங்களை கொடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிண்ண தொடர் இந்திய அணி அறிவிப்பு




மும்பை, ஒக. 20

ஆசிய கிண்ணத் தொடருக்கான 15 வீரர்கள் அடங்கிய இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில் /ப்மன் கில் உப தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னணி வீரர்களான ஸ்ரேயாஷ் ஐயர், வாஷிங்டன் சுந்தர், ரியான் பராக் ஆகியோரும் அணியில் உள்வாங்கப்படவில்லை.

ஆசிய கிண்ணத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 9 முதல் 28ஆம் திகதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்தத் தொடரில் கலந்து கொள்ளும் 15 வீரர்களை உள்ளடக்கிய இந்திய அணித் தெரிவு [illegible] நேற்று முன்தினம் [illegible] அஜித் அகார்கர் தலைமையிலான தெரிவுகுழுவினர் ரி-20 வடிவில் நடைபெறும் ஆசிய கிண்ணத் தொடருக்கான இந்திய அணி வீரர்களை தெரிவு செய்துள்ளனர். இந்திய அணி விளையாடும் போட்டிகள் அனைத்தும் டுபாயில் நடைபெறவுள்ளன.

அணி விவரம் - சூர்யகுமார் யாதவ் (தலைவர்), /ப்மன் கில் (உப தலைவர்), அபிஷேக் சர்மா, திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா, ஷிவம் துபே, அக்சர் பட்டேல், சஞ்சு சாம்சன், ஜிதேஷ் சர்மா, ஜஸ்ப்ரீத் பும்ரா, வருண் சக்கரவர்த்தி, அர்ஷ்தீப் சிங், குல்தீப் யாதவ், ஹர்ஷித் ராணா, ரிங்கு சிங்.

மேலதிக வீரர்கள் - பிரசித் கிருஷ்ணா, வாஷிங்டன் சுந்தர், ரியான் பராக், துருவ் ஜ/ரல், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

சட்டம் இப்படித்தான் நிறைவேற்றப் பட்டது.

ஆனால், கடந்த 11 வருடங்களாக அந்த சபைகள் செயல்படாமல் உள்ளன. 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் சும்மா இருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் பல கோடி ரூபாய் வீணடிக்கப்படுகிறது", என்றும் அவர் கூறினார். (ஐ)

## முன்னாள்...

சந்தேக நபராக பெயரிடப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

அவர், கைது செய்யப்படுவதற்கு முன்னர் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்பிணை கோரி மனு தாக்கல் செய்திருந்தார். அதனை நேற்று நீதிமன்றம் நிராகரித்தது.

இதைத் தொடர்ந்தே மிரிஹானையிலுள்ள அவரின் வீட்டில் வைத்து தென்னக்கோன் கைது செய்யப்பட்டார். (ஐ)

## ஆலயங்களில்...

புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபோன்று ஆலய திருவிழாக்களில் பொதுவாக வடக்கு, கிழக்கு பெண்கள் அதிகளவில் தங்க நகைகளை அணிந்து வருவது வழமை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே குறித்த குழு நகைக் களவில் ஈடுபட்டது என்றும் அவர் கூறினார்.

மேலும், மடு மாதா தேவாலய திருவிழாவில் 10இற்கும் மேற்பட்ட பெண்களின் தங்க நகைகள் களவாடப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 75 இலட்சம் ரூபாயிலும் அதிகமாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் ஆண்கள் இருவரும் பெண்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இதேநேரம், யாழ்ப்பாணத்தில் கைதான பெண்கள் குழுவுக்கும் மடுவில் கைதான பெண்கள் குழுவுக்கும் தொடர்பு உள்ளது. இந்திய பெண்களுடன் கைதானவர்கள் குறி சொல்லும் தொழிலில் ஈடுபடுபவர்கள். அவர்கள் சிலாபம், தம்புதேகம பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. (ஐ)

## நல்லூரானுக்கு...

மணிக்கு காலசாந்தி பூஜயும் , 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து, 7 மணியளவில் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 6.15 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகும். மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும். நாளை மறுதினம் மாலை 5.30 மணிக்கு பூங்காவன திருவிழா நடைபெறும். (ஐ)


## பலாலி...

பெரிய அகல - உடல் ஏ - 380 விமானங்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த விமான நிலையம் விரிவுபடுத்தப்படுவது சாத்தியமில்லை.

தற்போது இரண்டு இண்டிகோ விமானங்களை அனுப்புவது உட்பட இந்திய அரசாங்கத்தின் ஆதரவுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். எதிர்காலத்தில் யாழ்ப்பாண விமான நிலையத்துக்கு விமான நிறுவனங்களை ஈர்ப்பதற்காக விமான போக்குவரத்து கட்டணத்தை மேலும் குறைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும். மேலும் முனைய விரிவாக்கத்துக்கான கேள்வி கோரல்கள் அடுத்த மாதத்துக்குள் தொடங்கப்படும் - என்றார்.

பலாலி விமான நிலையம் தற்போது 1,400 மீற்றர் ஓடுதளத்தை கொண்டுள்ளது. ஏ-320 விமானம் தரையிறங்குவதற்கு குறைந்தது 2000 மீற்றருக்கு குறையாத ஓடுபாதை அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





நேற்றைய சப்பை ரதத் திருவிழாவின் பதிவுகள்... (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

## யாழ்.மாவட்ட....

ப. சத்தியலிங்கம், ஜெ. ரஜீவன் ஆகியோர் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவை நேற்று நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் பிரதமரின் உத்தரவுக்கு அமைய யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இன்றைய தினம் விசேட விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## இலங்கையில்...

செய்வதற்கும் நிலைமைகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பான தீர்மானங்களை புதுப்பிக்க வேண்டும்.

"ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, உரிமைகளை மதிக்கும் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்த போதிலும் அவை மிகக் குறைவாகவே உள்ளன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இலங்கையில் நீதிக்கான வாய்ப்புகள் எப்போதும் குறைவாகவே உள்ளன" - என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், அண்மையில் இலங்கைக்கு சென்று செம்மணி மனித புதைகுழியை பார்வையிட்டமை தொடர்பில் குறிப்பிடுகையில், "குறித்த விடயத்தில் உண்மையை வெளிக்கொணரக்கூடிய தடயவியல் நிபுணத்துவம் வாய்ந்த சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்", என்று வலியுறுத்தியுள்ளது.

"பல தசாப்தங்களாக இலங்கையில் சுமார் 20 மனித புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவை தொடர்பில் எப்போதும் விசாரணைகள் நடைபெறவில்லை. இந்தப் பின்னணியில், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் மனித உரிமைகள் பாதுகாவலர்களையும் புலனாய்வு அமைப்புகள் அச்சுறுத்தும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சிறுபான்மை சமூகங்களை சேர்ந்தவர்களை தன்னிச்சையாகத் தடுத்து வைக்கவும் துன்புறுத்துவதற்கும் இலங்கை அதிகாரிகள் பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரங்களை பயன்படுத்துகின்றனர்" - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



# 100 தகவல் தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஓக. 21

நாட்டில் பலவீனமான தொலைத் தொடர்பு இணைப்புகள் உள்ள பகுதிகளை உள்ளடக்கும் வகையில் 100 தகவல் தொடர்பு கோபுரங்களை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், கிராமப்புறங்களில் பலவீனமான சமிக்ஞை பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்காகத் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒரு தகவல் தொடர்பு கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான செலவில் 75 வீதம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவால் ஏற்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# மலையகத்தில் 52 வீதத்தினர் நீண்டகால ஏழ்மை நிலையில்

## சமூக பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஓக. 21

"மலையக பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும்", என்று கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "1995 ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் பிரகாரம் திவிநெகும திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. சமுர்த்தி அதிகார சபை, மேல் நாட்டு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சிறீ லங்கா தெற்கு அபிவிருத்தி நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றை ஒன்றிணைத்தே 2013ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க திவிநெகும திணைக்களம் உருவாக்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் 2017ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்த) சட்டத்தின் பிரகாரம் திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டது. இன்று சுமார் 40 இலட்சம் பயனாளர்கள் சமுர்த்தித் திட்டத்தில் உள்ளார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி இருப்பை சமுர்த்தி [illegible] கொண்டுள்ளது.

நடைமுறையில் உள்ள சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி மற்றும் சொத்து தொடர்பான விவரங்கள் கணக்காய்வு செய்யப்படவில்லை. அரசமைப்பின் 154ஆவது ஏற்பாடு மற்றும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கிகளின் நிதி விவகாரங்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி (திருத்த) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிகள் முறையாக கணக்காய்வு செய்யப்படாத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதுவரையான காலப்பகுதியில் உள்ளக கணக்காய்வுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாடு காணப்படுகிறது. ஆகவே நிதி ஒழுக்கத்தை பேணுவதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமூக கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத்திறனாக்குவதற்காகவே சமுர்த்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறந்த தெரிவுகளின் அடிப்படையில் தான் தற்போது சமுர்த்தி நலன்புரி திட்டம் வழங்கப்படுகிறது. மலையக பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈழத்தமிழர்களின் போராட்டத்தை தீர்க்கப்படாத காலனித்துவ நீக்க பிரச்னையாக அங்கீகரிக்குக!

## அமெரிக்க தமிழ் அமைப்புகள் கோரிக்கை

நியூயோர்க், ஓக. 21

**ஈழத் தமிழர் போராட்டத்தை தீர்க்கப்படாத காலனித்துவ நீக்க பிரச்னையாக அங்கீகரிக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை தமிழ் அமெரிக்க அமைப்புகள் கோரியுள்ளன. பல வருட தாமதம் காரணமாக இனப்படுகொலை குற்றவாளிகளைப் பாதுகாக்கப்பட்டு, உயிர் பிழைத்தவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்புகள் தெரிவிக்கின்றன.**

உலகளாவிய தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு, வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை தமிழ் சங்கம், தமிழ் அமெரிக்கர்கள் ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் குழு மற்றும் உலகத் தமிழ் அமைப்பு உள்ளிட்ட ஐந்து முன்னணி தமிழ் அமெரிக்க குழுக் கள், எழுதிய கூட்டு கடிதம் ஒன்றின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இதனை குறிப்பிட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிராகரித்தமைக்காக இலங்கையை அந்த அமைப்புகள் விமர்சித்துள்ளன.

அத்துடன், முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்து 16 ஆண்டுகளில் எந்தவொரு உறுதியான பொறுப்புக்கூறலையும் வழங்குவதற்கான பேரவையின் இயலாமை குறித்து அந்த அமைப்புகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, 1998 ஆம் ஆம் ஆண்டு கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்தில், செம்மணியில் 300-400 உடல்கள் இராணுவ உத்தரவால் புதைக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டார். எனினும், 1999 ஆம் ஆண்டு 15 உடல்கள் மட்டுமே தோண்டி யெடுக்கப்பட்டு, விசாரணைகள் நிறுத்தப்பட்டன. தற்போது செம்மணியில் 140க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதை அவர்கள் சுட்டிக்காட்டியதுடன், சுயாதீன சர்வதேச தடயவியல் விசாரணைகளுக்கு அழைப்பு விடுத்தனர்.

அதேநேரம், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் மைய அரசியல் பிரச்னை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைப்புகள் தெரிவித்தன.

பிரித்தானியர்கள் 1948 ஆண்டு சுதந்திரம் வழங்கியபோது, அவர்கள் தமிழர்களிடமிருந்து எந்த ஆணையையும் கோராமல் சிங்களவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தனர்.

அவர்கள் தமிழ் தேசத்திற்கான சுயநிர்ணயக் கொள்கையை நிலைநிறுத்தத் தவறிய ஒரு முறையற்ற மற்றும் முழுமையற்ற காலனித்துவ நீக்க செயல்முறையை மேற்கொண்டதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தேசபந்து தென்னக்கோன் தாக்கல் செய்த முன்பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 21

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தாம் கைது செய்யப்படுவதைத் தவிர்க்குமாறும், முன் பிணைக் கோரியும் தாக்கல் செய்த முன்பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நேற்று கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த 2022 மே 9 ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் தேசபந்து தென்னக்கோன் சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், இந்த சம்பவம் தொடர்பில் தாம் கைது செய்யப்படுவதை, தவிர்க்கும் வகையில் முன்பிணை வழங்குமாறு அவர் கோரியிருந்தார்.

சட்டத்தை மதிக்கும் ஒருவரின் முன்பிணை கோரிக்கையை பரிசீலிக்கும் இயலுமை நீதிமன்றத்துக்கு உள்ள போதிலும், நீதிமன்றத்தை தவிர்த்து வந்த ஒருவரின் கோரிக்கையை பரிசீலிக்க முடியாது என நீதவான் தமது உத்தரவில் தெரிவித்தார்.

எனவே, நீதிமன்றத்தை தவிர்ப்பது சட்டத்தை மதிக்கும் ஒருவரின் செயற்பாடாக அமையாது எனக் கூறி, கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர தேசபந்து தென்னக்கோனின் முன்பிணை விண்ணப்பத்தை நிராகரித்தார். (அ)

# மன்னார் மக்கள் நேற்றும் போராட்டம்



மன்னார், ஓக. 21

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று 18 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வரும் இந்தப் போராட்டத்துக்கு கொக்குபுடையான் கிராம மக்கள் நேற்றைய தினம் பங்கெடுத்தனர்.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிக்கலைத் தீர்க்க தவறிய இலங்கை உலக இணங்காத பட்டியலில் சேர்ப்பு

கொழும்பு, ஓக. 21

இலங்கையின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பு, அதன் சட்ட அமைப்பில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கத் தவறியதை அடுத்து, உலக ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், இலங்கையை அதன் இணக்கமற்ற பட்டியலில் சேர்த்துள்ளது.

இந்த நடவடிக்கை தற்போது உலக ஊக்கமருந்து எதிர்ப்பு குறியீட்டில் இணங்காத நான்காவது நாடாக இலங்கையை அடையாளப்படுத்தியுள்ளது.

மொன்றியலை தளமாகக் கொண்ட இந்த உலக அமைப்பு முன்னதாக, கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையின் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பை "கவனிப்புப் பட்டியலில்" சேர்த்ததாகத் தெரிவித்திருந்தது.

இதன்படி, ரஷ்யா மற்றும் இலங்கையைத் தவிர சர்வதேச பொஸ்க் பெலோட்டா கூட்டமைப்பு மற்றும் சர்வதேச உடற்பயிற்சி மற்றும் உடற்கட்டமைப்பு கூட்டமைப்பு ஆகியன, உலக ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பின் இணங்காத பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. (அ)

# யாழில் பதிவு செய்யாமல் 18 மருந்தகங்கள் வடக்கை மட்டும் ஏன் புறக்கணிக்கிறீர்கள்?

## சுகாதார அமைச்சிடம் அர்ச்சுனா கேள்வி

கொழும்பு, ஓக. 21

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் 18 மருந்தகங்கள் பதிவுகளின்றியும், அனுமதிப் பத்திரங்களின்றியும் இயங்குவதாக மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அவ்வாறிருப்பின் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற கேள்வி மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், இவ்வாறு பதிவு செய்யப்படாத மருந்தகங்கள் நாடு முழுவதும் இயங்குகின்றன. எனவே இவற்றைத் தரப்படுத்துவதற்குரிய சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் 10 வருடங்களாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே தற்போது இது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என தெரிவித்துள்ளார். (அ)

# எச்சரிக்கை மட்டத்தில் வெப்பம்!

கொழும்பு, ஓக. 21

நாட்டின் சில பகுதிகளில் நேற்று முதல் வெப்பத்தின் அளவு, மனித உடலால் உணரப்படும் அளவிற்கு எச்சரிக்கை மட்டத்தில் இருக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, கிழக்கு, வடமத்திய மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை, மொனராகலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் வெப்பமான காலநிலை நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் அறிவிப்பின் படி, நேற்று முதல் 10 மாவட்டங்களுக்கு வெப்பத்தின் அளவு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உணரப்படும் வெப்பச் சுட்டெண், குறித்த மாவட்டங்களில் சில இடங்களில் 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பொதுமக்கள் போதியளவு நீர் அருந்துமாறும், இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், வயோதிபர்கள், சிறுவர்கள் மற்றும் நோயாளர்கள் குறித்தும் மிகுந்த அவதானம் செலுத்துமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது. (அ)

# அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம்!




கொழும்பு, ஓக. 21

ஒப்புக்கொள்ளப்பட்ட எம்.சி.ஏ கொடுப்பனவை உடனடியாக வழங்கு என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை மேற்கொண்டது.

நாடு முழுவதும் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நேற்று இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது, நீக்கிவிடப்பட்ட 20 வீதத்தை உடனடியாக வழங்கு, அதிகரிக்கப்பட்ட இடர் கடனை உடனடியாக வழங்கு, மக்களாட்சி அரசாங்கம் பேச்சுவார்த்தையைத் தவிர்த்து வருகிறது, அதிகரிக்கப்பட்ட வரவு-செலவு முன்மொழிவுகளுக்கு பல்கலைக்கழகங்கள் தகுதி இல்லையோ? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org